செ.வெ.எண்: 81 நாள்: 29.01.2017

# தமிழ்நாட்டில் உள்ள 8706 துணை சுகாதார நிலையங்களில் அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ் கிராம சுகாதார செவிலியர்களுக்கு கை கணினி வழங்கப்படவுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில் மாநிலத்தில் முதல் முறையாக பரிட்சார்த்த முறையில் அனைவருக்கும் நலவாழ்வு சேவை திட்டத்தினை (Universal Health Coverage) தேசிய நலவாழ்வு திட்டக்குழும இயக்குநர் மரு.தரேஷ்அகமது,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 28.01.2017 அன்று துவக்கி வைத்தார்.

இந்த அனைவருக்கும் நலவாழ்வு சேவை திட்டத்தினை துவக்கி வைத்து கிராம சுகாதார செவிலியர்களுக்கு கை கணினியினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனவுத்திட்டமான அனைவருக்கும் நலவாழ்வு சேவை திட்டம் பரிட்சார்த்த முறையில் நமது மாவட்டத்தில் விராலிமலை வட்டாரத்தில் மாநிலத்தில் முதல் முறையாக துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் தமிழகத்தில் பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் வட்டாரம், புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை வட்டாரம், கிருஷ்ணகிரி மாவட்டம் சூலகிரி வட்டாரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் முதல்முறையாக பரிட்சார்த்த முறையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட விராலிமலை வட்டார கூட்டரங்க கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அனைவருக்கும் நலவாழ்வு சேவைத்திட்டத்தின் கீழ் அந்தந்த வட்டாரத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்களிலும் அனைத்து மருத்துவ சேவைகளான தாய் சேய் நலம், பொது மருத்துவம், ஆய்வக பரிசோதனை, ஸ்கேன் வசதி, அனைத்து வகையான தொற்று நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வசதி மற்றும் இதர சேவைகள் ஒரு தனி நபருக்கு எந்தவித கட்டணமின்றி இலவசமாக தமிழக அரசால் வழங்கப்படவுள்ளதுடன் இத்திட்டத்தின் கீழ் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அடிப்படை கட்டமைப்பு வசதி, தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து துணை சுகாதார நிலையங்களிலும் தற்போது உள்ள கிராம சுகாதார செவிலியர் பணியிடம் ஒன்று என்பது இரண்டாக உயர்த்தப்பட்டு, மொத்தம் 21 கிராம சுகாதார செவிலியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கர்ப்பிணி தாய்மார்களுக்கு தற்போது கிடைக்கும் அனைத்து சேவைகளும் உடனுக்குடன் அந்தந்த கிராமங்களிலேயே இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட ஏதுவாக அனைத்து கிராம சுகாதார செவிலியருக்கும் கை கணிணியும் (TABLET P C) வழங்கப்பட்டுள்ளது. அனைத்து சுகாதார நிலையங்களுக்கும் உபகரணங்கள், ஆய்வக வசதி, ரத்தசோகை, மற்றும் கர்ப்பகால நிரிழிவு நோய் கண்டறியும் வசதி ஆகியவை தற்போது உள்ள சேவையோடு கூடுதலாக ஏற்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 8706 துணை சுகாதார நிலையங்களிலுள்ள 1 கிராம சுகாதார செவிலியர் பணியிடம் கூடுதலாக 1 கிராம சுகாதார செவிலியர் பணியிடம் என மொத்தம் 2 கிராம செவிலியர் பணியிடமாக உயர்த்தப்படவுள்ளது. மேலும் தட்டம்மை மற்றும் ரூபெல்லா போன்ற நோய்களைத் தடுக்கும் விதமாக 9 மாதம் நிறைவடைந்த குழந்தை முதல் 15 வயது வரை உள்ள அனைத்து பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கும் சிறப்பு முகாம் தமிழகம் முழுவதும் பிப்ரவரி 6ம் தேதி முதல் 28ம் தேதி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் அனைத்து பொதுமக்களும் தங்களது குழந்தைகளுக்கு தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும். எனவே பொதுமக்கள் அனைவரும் நலவாழ்வு சேவை திட்டத்தினை உரிய முறையில் பெற்று நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

..2..

இந்நிகழ்ச்சியில் பொது சுகாதார துறை இயக்குநர் மரு.குழந்தைசாமி, மருத்துவ உயர்க்கல்வி இயக்குநர் மரு.நாராயணபாபு, பொது சுகாதார துறை கூடுதல் இயக்குநர் மரு.சித்ரா, இணை இயக்குநர் மரு.தாமரைச்செல்வி, சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர்கள் மரு.பரணீதரன் (புதுக்கோட்டை), மரு.கலைவாணி (அறந்தாங்கி), வருவாய் கோட்டாட்சியர் திரு.வடிவேல்பிரபு, முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, ஆத்மா குழுத்தலைவர் திரு.பழனியாண்டி, மருத்துவர்கள், செவிலியர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**